முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.04.02.2026

O.S No.108/2020

வா.சா.1- ராஜாராம்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

எனக்கு 1999 ல் திருமணம் நடந்தது. எனது திருமணத்தின் போது 1 இலட்ச ரூபாய் ரொக்கமும் 40 பவுன் சீர் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது மனைவியிடம்தான் கேட்க வேண்டும். நான் வரதட்சணை எதுவும் கேட்கவில்லை. எனக்கு திருமணம் முடிந்து 30 வருடங்கள் ஆகிறது. இதுவரை எதுவும் கேட்கவில்லை. அதை நான் தெரிந்து கொள்ளவில்லை. வாசாஆ 1 உயில் ஆவணத்தை எனது மாமா என்னிடம் கொடுத்தார். 2008 ஆரம்பத்தில் கொடுத்தார். 17.03.2008 ல் எனது மாமா இறந்தார்.

எனது மாமா இறந்து 7 வருடம் கழித்து எனது மாமியார் நாகரத்தினம் இறந்தார். எனது மாமியாருக்கு சுயமாக எந்த வருமானமும் இல்லை., பிரதிவாதி சென்னையில் வோல்ட்டாஸ் கம்பெனியில் வேலை பார்த்தார். பிரதி எனது மனைவியின் சகோதரன் ஆவார். எனது திருமணத்திறகு முன்போ அல்லது பின்போ பிரதி எங்கு வேலை பார்த்தார் என்று கேட்டோ, தெரிந்து கொள்ளவில்லை. திருமணத்தின்போது நல்ல பெருமாள் ஜவுளி கடையில் பில் செக்கிங் வேலை பார்த்தேன்.

அங்கு 13 வருடங்கள் வேலை பார்த்தேன். என்னை வேலையை விட்டு நீக்கினார்கள் என்றால் சரியல்ல. நானாக வெளியே வந்தேன். 40 இலட்சம் கையாடல் செய்ததாக புகார் உள்ளது என்றால் சரியல்ல. கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி கேள்வி அவசியமற்றது. எதிர் வழக்குரையில் சொல்லப்படாத விசயங்களை கேள்வி கேட்பதாக கடுமையான ஆட்சேபனை செய்கிறார். எனது மாமனாருக்கு 1998 ல் மாரடைப்பு வந்தது என்றால் தெரியும். தேதி , வருடம் தெரியாது. 3 முறை வந்ததாக சொல்லியுள்ளார்கள். 2007,

2008 லிலோ கடைசியாக வந்தபோது நான் உடன் இருந்தேன். முதல் முறை மாரடைப்பு வந்த போது எனது மாமனார் பிரதியை சென்னையில் வேலையை விட்டுவிட்டு இங்கு வந்து அவருக்கு உதவியாக இருக்கசொன்னார் என்றால் தெரியாது. உயிலில் சொல்லியுள்ள 1ம் நம்பர் சொத்தில் எனது மாமனார் கடன் ஏற்பட்டது என்றால் சரிதான்.

2 ½ இலட்சம் அல்லது 3 இலட்சம் கடன் வாங்கயிருந்தார். அதனை நான் திருப்பி செலுத்தியதற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளேன். உண்மையில் பிரதி அந்த கடனை திருப்பி செலுத்தினார் என்றால் சரியல்ல. பிரதிக்கு உயிலில் கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தில் வழக்கு நடந்ததாக சொல்லப்படும் விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் அந்த வழக்கு சொத்தை எனது மாமனாரே பிரதியிடம் இருந்து விலைக்கு வாங்கியயுள்ளார் என்றால் சரி.

அந்த வழக்கில் எனது மாமனாரின் வாரிசுகளாக பிரதியும், எனது மனைவியும் ,எனது மாமியாரையும் தரப்பினர்களாக சேர்த்திருந்தார்கள் என்றால் சரி. அந்த வழக்கில் வாசாஆ 1 உயில் இருப்பதாக நான் காட்டவில்லை என்றால் சரி. வாசாஆ 1 உயிலில் சாட்சி செய்தது யார் என்றால் ராமசந்திரன், நாகராஜன் ஆவார்கள். இவர்கள் நெருங்கிய நண்பர்கள் என்றால் அவ்வாறு இல்லை. எனது மாமனாருக்கு தெரிந்த நபர்கள். எனது மாமனாரின் எதிர் வீட்டுகாரர் ராமசந்திரன் ஆவார். அவரது வீட்டில் கூடி பேசும்போது நாகராஜன் வருவார். நானும் அதில் கலந்து பேசுவேன். சாட்சி தற்போது மாமனார் கூடி பேசுவதாகவும், நான் பேசமாட்டேன் என்றும் கூறுகிறார்.

வாசாஆ 1 உயிலை யார் எழுதியது என்று தெரியாது. பெயர் தெரியாது. ஆளை அடையாளம் தெரியும். அவர் எனக்கு பழக்கமில்லை எனது மாமனாருக்கு பழக்கமானவர்.

பழைய அசல் வழக்கு எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எங்களுக்காக ஆஜர் ஆன வழக்கறிஞர் தான் தற்போது இந்த வழக்கிலும் ஆஜர் ஆனார். எனது மாமனாரும், மாமியாரும் சண்டை எதுவும் இல்லாமல் சந்தோஷமாக இருந்தார்கள் என்றால் சரி. எனது மாமனார் அவரது மனைவிக்கு வாசாஆ 1ல் எந்தவொரு சௌகரியமும் ஏற்பாடும் செய்யவில்லை என்றால் சரி.

சென்னையில் பார்த்த வேலையை விட்டு அவரது அப்பாவை கவனிக்க வந்த பிரதிக்கும் வாசாஆ 1 உயிலில் எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்றால் சரி. எனது மாமியார் மாமனார் இறந்த பின்பு, பிரதியின் பராமரிப்பில் இருந்தார் என்றால் சரி. உண்மையில் வாசாஆ 1 உயில் எனது மாமனார் எழுதவில்லை என்றாலும், போலியாக நான் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

வாசாஆ 1 உயிலில் கையொப்பம் செய்தது எனது மாமனார் என்று என்னால் ஊர்ஜிதமாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. உயில் எழுதும் போது நான் இல்லை. உயிலை பதிவு செய்த போது நான் மாமனாருடன் சென்று இருந்தேன். உயிலில் உள்ள கையொப்பத்தை ஒப்பீடு செய்ய எதாவது ஆவணம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் பார்த்து சொல்கிறேன்.

பழைய வழக்கு எண் 99/2002 என்றால் எனக்கு தெரியாது. நாகர்கோவில் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வஎண். 326/2005 என்ற வழக்கு நடந்ததா என்றால் தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்த மைனர் , தற்போது மேஜர் என்றாலும் அவர் சாட்சியம் அளிக்க தயாரா என்றால் அவர் சாட்சியம் அளிக்க தயார்.

இந்த வழக்கு சொந்தமாக சார்பு நீதிமன்றத்தில் பாக வழக்கு தற்போது நடந்து

வருகிறது என்றால் சரி. போலியான உயில் தயார் செய்து நான் சொத்தை அபகரிக்க நினைத்ததால் மேற்படி பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற முத்திரை கட்டணம் இந்த வழக்கில் சரியாக கட்டவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.